

கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, குறுவை தொகுப்பு திட்டம் அறிவித்தமைக்காகவும், மேட்டூர் அணையில் குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்து விட்டமைக்காகவும், விவசாய பெருமக்களின் நலனிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாடு டிசம்பர் மாதம் நடைபெற உள்ளதையொட்டி அதற்கான பணியினை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே .என். நேரு தொடங்கி வைத்தார். இதில்கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர் சிவலிங்கம் , மத்திய மாவட்டச் செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான ஆர்.ராஜேந்திரன், மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ,மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், ஏ.ஏ.ஆறுமுகம், தகவல் தொழில்நுட்ப அணி மண்டல செயலாளர் டாக்டர் தருண், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து(எ) அன்பு , பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பாபு(எ) வெங்கடேஷ்வரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கணேஷ், பேரூராட்சி தலைவர் அன்பழகன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### ஊத்தங்கரை அருகே

# முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம்!

### திருமதி உஷாராணி குமரேசன் தொடங்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, ஆக. 27-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மூன்றாம் பட்டி ஊராட்சி கேத்துநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடக்க விழா நடைபெற்றது, ஊத்தங்கரை ஒன்றிய குழுத் தலைவர் உஷாராணி குமரேசன் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சத்துணவு சாந்தா முன்னிலை வகித்தார், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சிவப்பிரகாசம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜராஜேஸ்வரி, தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் குமரேசன், மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், முன்னாள் எம்எல்ஏ கிருஷ்ண மூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் பூபாலன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஜெயலட்சுமி ராதாகிருஷ்ணன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லாயோலா ராஜசேகர், தி.மு.க. நிர்வாகிகள் சத்திய நாராயணமூர்த்தி கற்பூரசுந்தரபாண்டியன் மோகன், தினகரன், அழகேசன், கிராம நிர்வாக அலுவலர் கவியரசி, பள்ளி தலைமை ஆசிரியர் கெவரம்மாள், ஊராட்சி செயலர் முருகன், ஆசிரியர்கள் புஷ்பா, லதா, நிர்மலா, ஜெயசீலி, ஷர்மிளா, ராம ஆண்டவர் பவித்ரா உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

### திருக்குவளையில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தந்த

# முதல்வருக்கு நாகை மாவட்ட எல்லையில் மாபெரும் வரவேற்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் திரண்டனர்!

நாகை.ஆக.27 -

கழகத்தலைவர் - தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர்கள் நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொடக்க கல்வி பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்கவும், அரசு அதிகாரிகள் கலந்து கொள்ளும் ஆய்வு கூட்டத்திற்கு கலந்து கொள்ள நாகை மாவட்டத்திற்கு மயிலாடுதுறையில் இருந்து கடந்த 24ம் தேதி இரவு வருகை தந்த கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் தலைமையில் நாகூர் வாஞ்சூர் ரவுண்டானா அருகே மாபெரும் எழுச்சி வரவேற்பு வழங்கப் பட்டது.

அதைத் தொடர்ந்து வேளாங்கண்ணி ஆர்ச் அருகே கழகத்தலைவர் தளபதிக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. பின்னர் 25ம் தேதி வேளாங்கண்ணியில் இருந்து கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையில் கலைஞர் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்க சென்ற முதல்வருக்கு திருப்பூண்டி, மேலப்பிடாகை, திருக்குவளை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் வரவேற்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அன்று மாலை நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சை ஆகிய 4 மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட உயர் காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டத்திற்குச் சென்ற கழகத்தலைவர் தளபதிக்கு புத்தூர் ரவுண்டானா மற்றும் நாகை ஈ.ஜி.எஸ்.பிள்ளை பாலிடெக்னிக் ஆகிய இடங்களில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. நாகை ஈ.ஜி.எஸ். பிள்ளை மாணவ, மாணவிகள் 4 ஆயிரம் பேர் ஒன்று கூடி முதல்வருக்கு மாபெரும் வரவேற்பு அளித்தனர். அதைத் தொடர்ந்து 26ம் தேதி வேளாங்கண்ணியில் இருந்து நாகைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்திற்கு சென்ற முதல்வருக்கு வழி நெடுங்கிலும் கழகத்தினரும், பொதுமக்களும் மாபெரும் வரவேற்பு கொடுத்தனர். நாகை மாவட்டத்தில் தமிழக முதல்வர் மூன்று நாட்கள் தங்கியதால் நாகை மாவட்டம் 3 நாட்கள் விழா கோலமாக காணப்பட்டது. கழகத் தலைவர் தளபதிக்கு வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளில் மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், க.மறைமலை. மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணி வண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர் வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, வேதாரண்யம் மா.மீ.புகழேந்தி, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார், நகரக் கழகச் செயலாளர்கள் கீழ்வேளூர் கா. அட்சய லிங்கம், வேளாங்கண்ணி மரியசார்லஸ், தலைஞாயிறு சுப்பிர மணியன், திட்டச்சேரி முகமதுசுல்தான் ஒன்றியக் குழு தலைவர்கள் வாசுகி நாகராஜன், செல்வராணி ஞான சேகரன், பேரூராட்சி தலைவர்கள் டயானாசர்மிளா, இந்திரா காந்திசேகர், மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகமூத்தமுன்னோடிகள், கழகத்தினர் உள்ளிட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டு வரவேற்பு அளித்தனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! : அண்ணல் காந்தி அடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தில், மது விலக்கு சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில், சட்ட விரோத சாராயம் அதிகரித்திருக்கிறதே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! உண்மைதான்; கடந்த இரண்டு ஆண்டு களில் மட்டும், குஜராத் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சட்ட விரோத சாராயத்தின் மதிப்பு, 212 கோடி ரூபாய் என்பது அதிர்ச்சி அளிக்கிறது.**

**குஜராத் காவல் துறை கைப்பற்றி, பாது காப்பாக வைத்திருந்த 28,336 பாட்டில் (916 பெட்டிகள் ) சாராயத்தில், 23 பெட்டி சாராயம் திருடு போய்விட்டதாம். இந்த சாராயத் திருட்டில், ஒரு போலீஸ்காரர் உள்ளிட்ட 15 பேர் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.**

**பா.ஜ.க. ஆட்சி நடக்கும் குஜராத் மாநிலத்தில் மதுவிலக்கு நடைமுறை இந்த லட்சணத்தில் இருக்கிறது!**



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன்,நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூர் கழக செயலாளர் முத்து இல்ல திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்ட , நகர, ஒன்றிய மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப் படுத்தி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேற்று முன்தினம் (25.8.2023) விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், அலங்கியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உணவு பரிமாறி தொடங்கி வைத்து மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி உணவு அருந்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் உள்ளார்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் 5-9-2023, செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணி அளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி தலைமையில், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு. கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றிட, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் நடத்துவது - குறித்து

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்: 25-8-2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி